**சார்பு நீதிமன்றம், மேலூர்**
நாள்*: 26.03.2026*
வா.சா.*1* – அப்துல் ராஜா முகமது *S/o* சிக்கந்தர்
*O.S. No.307/2022*
*(*சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்*.)*
குறுக்கு விசாரணை தொடர்ச்சி*:*

எனக்கு முகமது ரபீக்கை தெரியுமா என்றால் தெரியும் அவர் ஜமாத் தலைவர் ஆவார். பிரதிவாதிக்கு ஜமாத் தலைவர் முகமது ரபீக் முன்பாக செண்டு ஒன்றுக்கு *22000* ரூபாய் என்ற வீதம் *66* செண்டை வெள்ளைச்சாமி பேசி முடித்தார் என்றால் சரியல்ல. அவ்வாறு பேசி முடிக்கப்பட்டது என்றும் அதன் விளைவாக உழவடை வழக்கை திரும்ப பெற்று கொண்டதாக பேசி முடித்தார்கள் என்றால் சரியல்ல. வழகக்கு சொத்தை பிரதிவாதி வெள்ளைச்சாமி உழவடை செய்து வந்ததால் தான் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அவருக்கு குடிவாரஉரிமை*(*உழவடை*)* வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. நான் தவறாக சொல்கிறேன் என்றும் பிரதிவாதிக்கு ந.க.எண்*.8081/2022* மூலமாக உத்தரவு பெற்று அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவை எதிர்த்து வருவாய் நீதிமன்றத்தின்*,* தனி துணை ஆட்சியர் முன்பாக மேல்முறையயீடு நடத்தப்பட்டு வருகிறது என்றால் அதுபற்றி தெரியாது. மேற்படி வருவாய் துறை முன்பாக உள்ள வழக்கிலும் நான் தரப்பினர் அல்ல. வழக்கு சொத்தில் பிரதிவாதி தான் தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றும்,நானும்*,* எனக்கு முன்பாக இருந்து தாவூத்பீ என்ற நபரும் கூட்டாக சேர்ந்து கொண்டு பிரதிவாதியை அத்துமீறி வெளியேற்ற முயற்சி செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை *:* இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.03.26 10:05:07 +0530

*Sub Judge*
*Melur*